## கேள்வி மற்றும் பதில்

# தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அவை இலங்கையில் கொவிட்-19 இற்கான பதிலிறுப்பில் செலுத்துகின்றத் தாக்கங்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)
நவம்பர் 2020

இலங்கையில் கொவிட்-19 நோய்த்தொற்றுக்குள்ளான புதிய ஒரு தொகுதியினர் இனங்காணப்பட்டதனைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் (கட்டளைச் சட்டம்) பிரிவு 2 மற்றும் 3 இன்கீழ் சுகாதார அமைச்சரினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டதுடன், அவை 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி, வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட்ட 2197/25 எனுமிலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டன. இவ் வழிகாட்டியானது, இவ் ஒழுங்குவிதிகள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றினை எதிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய நடவடிக்கைகளுடன் தொடர்புறுகின்ற சட்டக் கட்டமைப்பினை ஆராய்கின்றது.

அரசியலமைப்பு ஆட்சி மற்றும் சட்டவாட்சியினை நிலைநிறுத்துகின்றமை என்பவற்றுக்கு அமைவாக, இந்நோய்த்தொற்றினை எதிர்ப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது. கொவிட்-19 உடன் தொடர்புறுகின்ற பல்வேறுபட்ட சட்ட மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்கனவே வேறு பல ஆவணங்களை வெளியிட்டுள்ளது. அவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வலைத்தளத்தில் கிடைக்கப்படக்கூடியதாக இருக்கும்.

## 1. இலங்கையில் கொவிட்-19 நோய்த்தொற்று உருவாகியமையினைத் தொடர்ந்து வர்த்தமானியிலிடப்பட்ட தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் யாவை?

- அதிவிசேட வர்த்தமானி இல. 2167/18- இது 2020 மார்ச் 20, வெள்ளிக்கிழமையன்று வெளியிடப்பட்டது. இது கட்டளைச்சட்டத்தின்கீழ் 1925 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட நடைமுறையிலிருக்கின்ற

தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக கொவிட்-19 இனை தனிமைப்படுத்தத்தகு நோயாக பிரகடனப்படுத்தியதுடன் அவ் ஒழுங்குவிதிகளை கொவிட்-19 தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடபடிமுறைகளுக்கு ஏற்பாக்கியது.

• முறையான அதிகாரி மற்றும் நோய்க்குட்பட்ட பிரதேசம் என்பனவற்றை வரையறுக்கின்ற, 2020 மார்ச் 25 அன்று வெளியிடப்பட்ட 2168/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி

• கொவிட்-19 இனால் இறந்தவர்களின் கட்டாயத் தகனம் தொடர்பாக, 2020 ஏப்ரல் 11 அன்று வெளியிடப்பட்ட 2170/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி

• நடமாடும் சுதந்திரம் மீதான மட்டுப்பாடுகள் மற்றும் பொது இடங்களில் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டிகள் தொடர்பாக, 2020 ஒக்ரோபர் 15 அன்று வெளியிடப்பட்ட 2197/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி

## 2. இவ் ஒழுங்குவிதிகள் எவ்வாறு சாதாரண பிரஜைகளில் தாக்கம் செலுத்துகின்றது?

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இவ் ஒழுங்குவிதிகள் சாதாரண பிரஜைகளின் வாழ்க்கையில் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது:

- போதுமான சமூக இடைவெளியினை உறுதிப்படுத்துவதற்காக பொதுக் கட்டிடங்களில் மற்றும் பொது போக்குவரத்தில் இருக்கக்கூடிய நபர்களின் அதிகபட்ச எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படலாம்.[1]

- முறையான அதிகார சபையொன்று அவதானிப்புக்கான வைத்தியசாலையொன்றினை அல்லது இடமொன்றினை ஸ்தாபித்து அதனை குறித்தொதுக்கின்றபோது, அதிகாரமளிக்கப்படாத எந்தவொரு நபராலும் அதனை அணுக முடியாது அல்லது அதன் 100 கஜமளவிற்குள் உட்பிரவேசிக்க முடியாது.[2]

- முறையான அதிகாரி ஒருவர் “தொற்றுள்ள அல்லது தொற்றுள்ளது என சந்தேகிக்கப்படுகின்ற எந்தவொரு நபரையும்”[3] ஏதேனுமொரு வீட்டிலிருந்து அல்லது இடமொன்றிலிருந்து, பொது வைத்தியசாலைகளுக்கு அல்லது அந்நோக்கத்திற்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேறு இடங்களுக்கு, தீர்மனிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதியொன்றுக்கு அனுப்புவதற்கு இயலும் அல்லது அத்தகைய நபரை சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு பணிக்க இயலும் என்பதுடன் இச்செயன்முறைக்கு இடையூறு விளைவித்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றாகும்.[4]

- பரவலடையக்கூடிய, தொற்றக்கூடிய அல்லது கொள்ளைநோய்த் தன்மை வாய்ந்த ஏதேனும் நோயொன்றினால் எவரேனும் வதிவிடவாசிகள்

[1] 1925 ஒழுங்குவிதிகளுள் ஒழுங்குவிதிகள் 61 மற்றும் 65 மற்றும் 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதிகள் 90, 94, 95 மற்றும் 97

[2] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதிகள் 43 மற்றும் 44

[3] இதன் காரணமாக எந்தவொரு நபரும் தனக்கு எவ்வித நோய் அறிகுறிகளுமில்லை என்பதனை அடிப்படையாகக் கொண்டு தனிமைப்படுத்தப்படுவதற்கு மறுப்பு தெரிவிக்கக்கூடாது.

[4] 1925 ஒழுங்குவிதிகளுள் ஒழுங்குவிதி 49 மற்றும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4(1) மற்றும் 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதிகள் 91 மற்றும் 92

பாதிக்கப்பட்டுள்ளனரா என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக முறையான அதிகாரி எந்தவொரு வீடு மற்றும் வளாகத்தினுள்ளும் நுழைய முடியும்.[5]

- பரவலடையக்கூடிய அல்லது தொற்றக்கூடிய நோயொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நபர் பொது போக்குவரத்தினைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது (டெக்ஸி மற்றும் தனிப்பட்ட வாடகை வாகனம் உள்ளடங்கலாக).[6] மேலும் இவ் ஒழுங்குவிதியானது, அத்தகையப் பொதுப் போக்குவரத்தின் உரிமையாளர் அல்லது ஓட்டுனர் முறையான அதிகாரியின் அனுமதியின்றி அத்தகையத் தொற்றுள்ள ஒரு பயணியினை வாகனத்தில் ஏற்றுவதனையும் தடை செய்கின்றது.[7]

- நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றிலுள்ள, ஏதாயினும் பொது இடமொன்றில் அல்லது வேறு ஒருவருடன் நெருக்கமானத் தொடர்பு ஏற்படத்தகு இடமொன்றில் உள்ள ஒரு நபர் எந்நேரமும் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் இரு நபர்களுக்கிடையில் ஒரு மீற்றருக்கு குறையாத சமூக இடைவெளியினைக் கடைப்பிடித்தலும் வேண்டும்.[8]

- முறையான அதிகாரியினால் அனுமதியளிக்கப்படாத வரையில், நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றில் முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள், எந்தவொரு நபரும் ஏதேனும் நிறுவனம், வியாபார இடம் அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் வளாகத்தினை பொது மக்களுக்காக திறந்து வைத்திருத்தல் கூடாது. அத்தியாவசிய சேவைகள் அல்லது ஏதேனும் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றில் தேசிய பாதுகாப்பு அல்லது பொது சுகாதாரம் என்பவற்றினைப் பேணுவதற்கு அவசியமான சேவைகளை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனம், தொழிற்தளம், அங்காடி, கடை, விற்பனை நிலையம் அல்லது வேறு ஏதேனும் வியாபார இடம் என்பன செயற்படுவதற்கு முறையான அதிகாரி அனுமதி அளிக்கலாம்.[9]

- அத்தியாவசியத் தேவைகளை வழங்குகின்ற தொழிற்தருனர் அல்லது ஏதேனும் நிறுவனம் அல்லது தொழிற்தளத்தின் பொறுப்பதிகாரி அல்லது அங்காடி, கடை, விற்பனை நிலையம் அல்லது வேறு ஏதேனும் வியாபார இடத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பதிகாரி கீழ்வருவன தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்டிருப்பார்:

  (அ) வளாகத்திற்குள் இருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நபர்களின் அதிக பட்ச எண்ணிக்கையினைவிட அதிகமானோர் வளாகத்திலில்லை என்பதனை உறுதிப்படுத்தல் மற்றும் சமூக இடைவெளி பேணப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்;
  (ஆ) அனைத்து நபர்களும் எந்நேரமும் முகக்கவசம் அணிந்துள்ளனர் என்பதனை உறுதிப்படுத்தல்;
  (இ) உள் நுழைகின்ற அனைத்து நபர்களினதும் உடல் வெப்பநிலை அளக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்;

---

5 *1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 66*

6 பொதுப் போக்குவரத்து என்பது வாடகைக்காகப் பயணிகளை ஏற்றுகின்ற எந்தவொரு தனிப்பட்ட வாடகைக் கார், தெரு கார்,கப்பல், கெப், பேரூந்து, விமானம் அல்லது வேறு வாகனம் என மிகப் பரந்தளவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

7 *1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 69*

8 *2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 90*

9 *2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 92 மற்றும் 93*

(ஈ) கைகழுவுவதற்கு போதுமான வசதிகளை செய்துக் கொடுப்பதனை மற்றும் அனைவரும் உள்நுழைய முன்னர் கைகளை கழுவுகின்றனர் என்பதனை உறுதிப்படுத்தல்.[10]

- எவரேனுமொரு நபரின் உடல்வெப்ப நிலை, முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உடல்வெப்ப நிலையினை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அத்தகைய நபரினை அவ்வளாகத்திற்குள் நுழைவதற்கு அனுமதித்தல் கூடாது.[11]
- ஏதேனுமொரு நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றில் பொதுப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனத்தின் ஓட்டுனர், நடத்துனர் மற்றும் உரிமையாளர் என்போர் பயணிகளுக்கிடையில் சமூக இடைவெளி இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.[12]

## 3. முறையான அதிகாரி என்பவர் யார்?

25 மார்ச் 2020 அன்று பிரசுரிக்கப்பட்ட 2168/6 ஆம் இலக்கத்தினை உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக, முழு இலங்கைக்குமான முறையான அதிகாரத்தைக் கொண்டுள்ள நபராக சுகாதார சேவைகளுக்கான தலைமையதிபதி பெயரிடப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளில் 1 ஆம் ஒழுங்குவிதிக்கு அமைய, சுகாதார சேவைகளுக்கான தலைமையதிபதி தன்னுடைய சில அதிகாரங்களை சுகாதார மருத்துவ அதிகாரிகள், அதேபோல உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள், துறைமுகங்கள், விமானநிலையங்கள் மற்றும் ஏதேனும் இராணுவ, கடற்படை அல்லது விமானப்படை ஸ்தாபகங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகள் மற்றும் சுகாதார சேவைகளுக்கான மாவட்ட பணிப்பாளர் அல்லது சுகாதார சேவைகளுக்கான பிராந்திய பணிப்பாளர் ஆகியோருக்கு **பகிர்ந்தளிக்கலாம்**.

எவ்வாறெனினும், பதில் பொலிஸ்மா அதிபருக்கு விலாசமிட்டு சட்டமா அதிபர் எழுதியிருந்த கடிதத்தில், சுகாதார சேவைகளுக்கான தலைமையதிபதி முறையான அதிகாரி என்ற தனது அதிகாரங்களை பதில் பொலிஸ்மா அதிபருக்கு பகிர்ந்தளித்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.[13] கொவிட்-19 இற்கான பதிலிறுப்பின் பகுதியொன்றாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளுக்கான நெறிமுறைத்தன்மையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இக்கடிதம் பயன்படுத்தப்படுகின்றபோதிலும், எவ் சட்ட ஏற்பாடுகள் மற்றும்/அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் முறையான அதிகாரியின் அதிகாரங்கள் பதில் பொலிஸ்மா அதிபருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவற்ற விடயமாகவே உள்ளது.

[10] 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 94 மற்றும் 95
[11] 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 96
[12] 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 97
[13] MENAFN, 'Sri Lanka- AG approves steps enforced by Police' available at https://menafn.com/1100099455/Sri-Lanka-AG-approves-steps-enforced-by-Police accessed 04 November 2020.

## 4. நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம் என்பது என்ன? யார் நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றினை அடையாளப்படுத்த இயலும்?

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ், 'நோய்க்குட்பட்டவர்' என்பது நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளவர் அல்லது நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபரைக் குறிப்பதாக வரையறுக்கப்படுகின்றது.

25 மார்ச் 2020 அன்று பிரசுரிக்கப்பட்ட 2168/6 ஆம் இலக்கத்தினை உடைய அதிவிசேட வர்த்தமானி ஆனது, "நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம்" என்பதனை நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டதும் மற்றும் முறையான அதிகாரி தீர்மானிக்கவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்கு நோய்க்குட்பட்ட பிரதேசங்களாக முறையான அதிகாரியினால் நோய்க்குட்பட்டதாக வெளியிடப்பட்டதுமான ஏதேனும் இடப்பிரதேசம் என வரையறுக்கின்றது.

இவ் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, முறையான அதிகாரி நோய்க்குட்பட்ட இடப்பிரதேசமொன்றினை அடையாளப்படுத்த வேண்டும். எவ்வாறெனினும், தற்போது நோய்க்குட்பட்ட இடப்பிரதேசங்களை அடையாளப்படுத்துகின்ற பொது தொடர்பாடல்கள், வர்த்தமானியின்கீழ் முறையான அதிகாரியாக அடையாளப்படுத்தப்படாத பொலிஸாரினால் வெளியிடப்படுகின்றன.

## 5. இவ் ஒழுங்குவிதிகளின்கீழ் தனிமைப்படுத்தல் செயன்முறையினை மேற்கொள்வதற்கான அதிகாரம் யாருக்கு உள்ளது?

ஒக்ரோபர் 2020 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுள், 91 ஆம் மற்றும் 92 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, முறையான அதிகாரி ஒருவர் "தொற்றுள்ள அல்லது தொற்றுள்ளது என சந்தேகிக்கப்படுகின்ற எந்தவொரு நபரையும்" ஏதேனுமொரு வீட்டிலிருந்து அல்லது இடமொன்றிலிருந்து, பொது வைத்தியசாலைகளுக்கு அல்லது அந்நோக்கத்திற்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேறு இடங்களுக்கு, தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதியொன்றுக்கு அனுப்புவதற்கு இயலும் அல்லது அத்தகைய நபரை சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு பணிக்க இயலும்.

எவ்வாறெனினும், தற்போது ஒழுங்குவிதிகளின் கீழ் முறையான அதிகாரியாக அடையாளப்படுத்தப்படாத பொலிஸ் மற்றும்/ அல்லது இராணுவத்தினராலேயே தனிமைப்படுத்தல் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. இது அச்செயன்முறையிலுள்ள பொறுப்புகூறும் தன்மை மற்றும் சாத்தியமான அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றது.

## 6. நபரொருவரை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அல்லது சுய தனிமைப்படுத்தலுக்கு பணிக்கின்றபோது பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறைகள் யாவை?

தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் 1925 இன்கீழ், முறையான அதிகாரியொருவர் எவரேனுமொரு வதிவிடவாசி ஏதேனும் தொற்றக்கூடிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாரா என நிச்சயித்துக் கொள்வதற்காக வீடொன்றினுள் அல்லது வளாகங்களுக்குள் நுழையலாம்.[14] இச் செயன்முறைக்கு இடையூறு செய்தலானது கட்டளைச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றாகும்.

---

[14] 1925 தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 66

எவ்வாறெனினும், இச்செயன்முறை தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு முறைப்பாடுகள் மற்றும் கரிசனைகளின் வெளிப்படுத்தல்களைக் கருத்திற்கொண்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனிமைப்படுத்தல் செயன்முறையின்போது பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டிகளை வெளியிட்டுள்ளது.

கீழ்வரும் முறைகளினூடாக தனிமைப்படுத்தல் செயன்முறை சட்டத்தினால் ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது:

- ''முறையான அதிகாரியினால்'' செய்யப்படுகின்ற அதிகார பகிர்வில் வெளிப்படைத்தன்மை
- சோதனை செய்கின்ற அதிகாரங்களை குறித்தளிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த நபர்களுக்கு அளித்தல்
- தனிமைப்படுத்தல் நிலையங்களாக குறித்தொதுக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் குறித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் என்பனவற்றைப் பட்டியலிடுதல்
- தனிமைப்படுத்தல் தேவைப்படுத்தப்படுகின்ற காலப்பகுதியினைத் தெளிவாக்கல்
- தனிமைப்படுத்தலுக்கான காரணம், அவர்கள் அழைத்து செல்லப்படுகின்ற இடம் மற்றும் தனிமையிலிருக்க வேண்டிய கால அளவு என்பன உள்ளடங்கலாக தனிமைப்படுத்தப்படுகின்ற நபர்களுக்கான இரசீதொன்றினை வழங்குகின்ற முறையினை உருவாக்குதல்
- தனிமைப்படுத்தப்படுகின்ற நிலையங்களை வெளியக கண்காணிப்பு செய்தல், விசேடமாக இது முறையான அதிகாரியினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டிருப்பவர்கள் ஒரு தொற்றக்கூடிய வைரசொன்றினால் துரதிஷ்டவசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்பதற்கு மாறாக, அவர்களை குற்றவாளிகள் போல பொது மக்களிடையே காண்பிக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முயற்சிகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதனைத் தடை செய்தல்.

தனிமைப்படுத்தல் செயன்முறையினால் ஏற்படுத்தப்படுகின்ற கடினத்தன்மைகளை குறைப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கீழ்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது:

- தனிமைப்படுத்தப்படுகின்ற காலப்பகுதி சம்பளத்துடன் கூடிய/ கடமை விடுமுறையாக கருதப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்
- தனிமைப்படுத்தலில் உள்ளவர்களின் குடும்பங்களுக்கு நிதி அல்லது வேறு ஏதேனும் உதவி வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்
- ஒரு நபர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றபோது அது தொடர்பாக குறிப்பிட்ட கிராம சேவகருக்கு உடனடியாக அறிவித்தல்
- தனிமைப்படுத்தல் செயன்முறை காரணமாக குடும்பங்களிலுள்ள இலகுவில் ஊறுபடத்தகு தங்கி வாழ்ந்தோர் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றபோது, முறையான அதிகாரிகளுக்கு அறிவிப்பது உள்ளடங்கலாக அத்தகைய ஊறுபடத்தகு உறுப்பினர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன என்பதனை கிராம சேவகர் உறுதிப்படுத்தல்.

## 7. தற்போது சில பிரதேசங்களில் மட்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருப்பதன் சட்ட அடிப்படை யாது?

கொவிட்-19 இற்கான பதிலிறுப்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கின் சட்ட வலிதுடைமை தொடர்பில் இதற்கு முன்னரும் கேள்வியெழுப்பப்பட்டிருந்தது.[15]

தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்கானது பெரும்பாலும் "தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு" என சுட்டிக்காட்டப்படுகின்றது. எவ்வாறெனினும், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டமானது, எவ்வகையிலான "ஊரடங்கினையும்" அமுல்படுத்துவதற்கான எவ்வித ஏற்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. "ஊரடங்கு" என்ற சொல்லானது பொது மக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் பிரிவு 16 இல் மட்டுமே காணப்படுகின்றது என்பதுடன் இது ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட வேண்டியதாகும்.

- பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21(2) ஆனது, "பிரிவு 2 இன் உபபிரிவு (3) இன் ஏற்பாடுகள், பிரிவு 12, **பிரிவு 16** அல்லது பிரிவு 17 இன் கீழ் ஆக்கப்படுகின்றக் கட்டளையொன்று தொடர்பிலும் பரஸ்பரமாக ஏற்புடையதாகும்" என கூறுகின்றது.

- பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02(3) ஆனது, "இப்பிரிவில் முற்கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளின்கீழ் பிரகடனமொன்று செய்யப்படுகின்றபோது, அப்பிரகடனம் செய்யப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அக்காலப்பகுதியில் பாராளுமன்றம் பத்து நாட்களுக்குள் முடிவுறாத ஒத்திவைப்பு அல்லது கூட்டத்தொடர் முடிவு நீடிப்பொன்றினால் பிரிந்திருக்குமாயின், அப்பிரகடனமானது பத்து நாட்களுக்குள் பாராளுமன்றக் கூட்டமொன்றிற்காக வழங்கப்பட வேண்டும்."

ஆகவே, சட்டத்தின்படி, ஊரடங்கு அமுலாக்கம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக வர்த்தமானியிலிட வேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு என்பதுடன் அதன்பின்னர் வர்த்தமானி தொடர்பானத் தகவல்களை பாராளுமன்றத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

## 8. பொதுமக்களிடையே எழுமாறான வெப்பநிலை சோதனைகளை மேற்கொள்ளும் அதிகாரம் யாருக்கு உண்டு?

இராணுவ நடமாடும் குழுக்கள் ரோந்து சென்று எழுமாறான வெப்பநிலை சோதனைகளை மேற்கொள்வதாக ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. "இராணுவ குழுக்கள் கொழும்பின் அனைத்து பாகங்களிலும் எழுமாறான வெப்பநிலை சோதனைகளை மேற்கொள்கின்றனர். இது நோய்த்தொற்றினைக் கொண்டிருக்கக்கூடிய சாத்தியப்பாடுள்ளோர் தொடர்பில் அக்கறை மற்றும் விழிப்பினை உறுதிப்படுத்துவதற்காகும். மேலும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் திடீரெனத் தயார் செய்யப்பட்ட வீதித் தடைகளை அமைத்துள்ளதுடன் அவற்றினூடாக ஒவ்வொரு நாளும் சுமார் 2,500 வாகனங்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இதுவரையில், நாம் 25,000 வாகனங்கள் வரையில் பரிசோதனை செய்துள்ளோம் என்பதுடன் நூற்றிற்கும் குறைவானோர் வைத்தியசாலைகளுக்கு செல்லுமாறு

[15]Centre for Policy Alternatives, 'Curfew in response to COVID-19: Legal Framework and Relevant Questions in Sri Lanka' available at <https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19- legal-framework-and-relevant-questions-in-sri-lanka/> accessed 03 November 2020. ; Human Rights Commission of Sri Lanka, 'HRCSL Recommendations on Regularizing the Imposition of Curfew' available at <https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/curfew.HRCSL-recommendation- final.pdf> accessed 03 November 2020.

பணிக்கப்பட்டுள்ளனர்'' என இராணுவ பேச்சாளர் படைப்பகுதித் தலைவர் சந்தன விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

2197/25 என்ற இலக்கத்தினைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலானது, தொழிற்தருனர் அல்லது ஏதேனும் நிறுவனம் அல்லது தொழிற்தளத்தின் பொறுப்பதிகாரி அல்லது அங்காடி, கடை, விற்பனை நிலையம் அல்லது வேறு ஏதேனும் வியாபார இடத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பதிகாரிக்கு, அத்தகைய இடங்களில் உள் நுழைவதற்கு முன்னர் ஒவ்வொரு நபரினதும் உடல் வெப்பநிலை அளக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரத்தினை வழங்குகின்றது.[16]

கட்டளைச் சட்டத்தின்கீழ், இன்றைய தினம் வரையில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைய இராணுவத்தினர் வெப்பநிலை சோதனைகளைச் செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் இல்லை.

## 9. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுடன் நபரொருவர் இணங்கத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடபடிமுறை யாது?

சட்டபூர்வமான அதிகாரம் அல்லது காரணமின்றி, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாக செயற்படுகின்றமையினை இக்கட்டளைச் சட்டம் தண்டனைக்குரிய குற்றமொன்றாக்குகின்றது. நபரொருவர் இவ் ஒழுங்குவிதிகளுடன் இணங்கத்தவறுகின்றபோது, அவரை நீதவான் நீதிமன்றம் முன்னிலையில் குற்றஞ் சாட்டலாம் என்பதுடன் தண்டனையளிக்கப்படுமாயின் ஆறு மாதங்களுக்கு மேற்படாத சாதாரண அல்லது கடூழிய சிறைத்தண்டனை விதிக்கலாம் அல்லது தண்டப் பணம் விதிக்கலாம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் ஆகிய இரண்டினையும் விதிக்கலாம்.

மாற்றுவழியாக அவர், உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனுமொரு நோயின் தொற்றினை பரவலடையச் செய்யக்கூடிய ஏதேனுமொரு செயலை சட்டமுரணாகவோ அல்லது கவனயீனமாகவோ புரிவதனை குற்றமொன்றாக்குகின்ற தண்டனைக் கோவையின் பிரிவு 262 இன் கீழ் அல்லது தொற்றக்கூடிய நோயொன்று பரவலாகக் காணப்படுகின்ற இடத்திற்கும் ஏனைய இடங்களுக்குமிடையிலான தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்காக அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டுள்ள மற்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு விதியினை தெரிந்தே மீறுதலை குற்றமொன்றாக்குகின்ற பிரிவு 264 இன்கீழ் குற்றஞ் சாட்டப்படலாம்.

## 10. கொவிட்-19 இனால் இறப்பவர்களின் சடலங்களைக் கட்டாயத் தகனம் செய்வது தொடர்பான சட்ட நிலைப்பாடு யாது?

கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(1)(i) ஆனது, நோயினால் இறந்த எந்தவொரு நபரினதும் அடக்க அல்லது தகன முறை தொடர்பில் குறிப்பிடுகின்ற ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான அதிகாரத்தினை அமைச்சருக்கு வழங்குகின்றது. 2170/8 என்ற இலக்கத்தினையுடைய மற்றும் 2020 ஏப்ரல் 11, சனிக்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள ஒழுங்குவிதிகள் கொவிட்-19 இனால் இறந்தவர்கள் அல்லது கொவிட் 19 இனால் இறந்தவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களின் உடல்களை தகனம் செய்வதனை கட்டாயமானதாக்குகின்றது.

[16] 2020 ஒக்ரோபர் ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 94, 95 மற்றும் 96

*கொவிட்-19 இன் பின்னணியில், 'இறந்த உடலொன்றினை பாதுகாப்பாக முகாமை செய்வதற்கான தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு' தொடர்பான, 24 மார்ச் 2020 எனத் திகதியிடப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் இடைக்கால வழிக்காட்டியொன்று உள்ளது. 'சடலங்கள் நோயினை பரிமாற்றம் செய்வதில்லை' மற்றும் 'தொற்று நோயினால் இறந்தவர்களின் சடலங்கள் எரிக்கப்பட வேண்டுமென்ற பொதுவான மாயை உள்ளது. ஆனால் அது உண்மையல்ல. தகனம் என்பது கலாசாரத் தெரிவு மற்றும் கிடைக்கக்கூடிய வளங்கள் என்பனவற்றுடன் தொடர்புடைய விடயமொன்றாகும்' என இவ்வழிகாட்டி கூறுகின்றது. மேலும், இவ்வழிகாட்டியானது, குடும்பங்களின் உரிமைகள், மரணத்திற்கான காரணத்தினை விசாரணை செய்ய வேண்டிய தேவை மற்றும் தொற்றுக்கு ஆளாகக்கூடிய அபாயங்கள் என்பனவற்றை சமனிலைப்படுத்தி ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் தனித்தனி நிகழ்வுகள் என்ற அடிப்படையில் முகாமை செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குகின்றது. அகற்றல் தொடர்பாக கூறுகின்றபோது, 'கொவிட்-19 இனால் இறந்தவர்கள் ஒன்றில் புதைக்கப்படலாம் அல்லது எரிக்கப்படலாம்' என அவ்வழிகாட்டி கூறுகின்றது. அண்மையில் அரசாங்கமானது, 2170/8 வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளதன்படியான கட்டாய தகனத்தினை மீள்பரிசீலனை செய்வதாக அறிவித்திருந்தது.*